## டிசம்பர் – 31 – திங்கள்

**புனித சில்வெஸ்டர்**

**ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்: அவர் பெயரை வாழ்த்துங்கள்: திபா. 96:2**

-----------------------------------------------------------------

### முதல் வாசகம் : 1 யோவான் 2 : 18 - 21

என் அன்பார்ந்த குழந்தைகளே, இதுவே இறுதிக்காலம். எதிர்க் கிறிஸ்து வருவதாக நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களே! இப்போது எதிர்க் கிறிஸ்துகள் பலர் தோன்றியுள்ளனர். ஆகவே இறுதிக் காலம் இதுவேயென அறிகிறோம். இவர்கள் நம்மிடமிருந்து பிரிந்தவர்கள் உண்மையில் இவர்கள் நம்மைச் சேர்ந்தவர்களே அல்ல் நம்மைச் சேர்ந்தவர்களாக இருந்திருந்தால் நம்மோடு சேர்ந்தே இருந்திருப்பார்கள். ஆகையால் இவர்கள் நம்மைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பது வெள்ளிடைமலை. நீங்கள் தூயவரால் அருள் பொழிவு பெற்றிருக்கிறீர்கள். ஆகையால் நீங்கள் அறிவு பெற்றுள்ளீர்கள். நீங்கள் உண்மையை அறியவில்லை என்பதால் நான் உங்களுக்கு எழுதவில்லை மாறாக, அதை அறிந்துள்ளீர்கள் என்பதாலும் பொய் எதுவும் உண்மையிலிருந்து வராது என்பதாலுமே நான் எழுதியுள்ளேன்.

**பதில்பாடல் :** விண்ணுலகம் மகிழ்வதாக. முண்ணுலகம் களிகூர்வதாக

### நற்செய்தி : யோவான் 1 : 1 - 18

தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது. வாக்கு என்னும் அவரே தொடக்கத்தில் கடவுளோடு இருந்தார். அனைத்தும் அவரால் உண்டாயின. உண்டானது எதுவும் அவரால் அன்றி உண்டாகவில்லை. அவரிடம் வாழ்வு இருந்தது. அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது. அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது. இருள் அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை. கடவுள் அனுப்பிய ஒருவர் இருந்தார் அவர் பெயர் யோவான். அவர் சான்று பகருமாறு வந்தார். அனைவரும் தம் வழியாக நம்புமாறு அவர் ஒளியைக்குறித்துச் சான்று பகர்ந்தார். அவர் அந்த ஒளி அல்ல் மாறாக, ஒளியைக் குறித்துச் சான்று பகர வந்தவர். அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்துகொண்டிருந்தது. ஒளியான அவர் உலகில் இருந்தார். உலகு அவரால்தான் உண்டானது. ஆனால் உலகு அவரை அறிந்து கொள்ளவில்லை. அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார். அவர்கள் இரத்தத்தினாலோ உடல் இச்சையினாலோ ஆண்மகன் விருப்பத்தினாலோ பிறந்தவர்கள் அல்ல் மாறாகக் கடவுளால் பிறந்தவர்கள். வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள் கண்டோம். அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார். யோவான் அவரைக் குறித்து, ”எனக்குப்பின் வரும் இவர் என்னைவிட முன்னிடம் பெற்றவர் ஏனெனில், எனக்கு முன்பே இருந்தார் என்று நான் இவரைப்பற்றியே சொன்னேன்” என உரத்த குரலில் சான்று பகர்ந்தார். இவரது நிறைவிலிருந்து நாம் யாவரும் நிறைவாக அருள் பெற்றுள்ளோம். திருச்சட்டம் மோசே வழியாகக் கொடுக்கப்பட்டது. அருளும் உண்மையும் இயேசு கிறிஸ்து வழியாய் வெளிப்பட்டன. கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும் கடவுள்தன்மை கொண்டவருமான ஒரே மகனே அவரை வெளிப்படுத்தியுள்ளார்.

**தியானம்:** 2018ம் ஆண்டின் இறுதி நாளில் காலடி எடுத்து வைத்துள்ளோம். இந்த உலகம் முழுவதும் இப்பொழுது குழம்பிய நிலையிலேயே காணப்படுகின்றது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இந்த நிலையில்தான் இன்றைய முதல் வாசகத்தில் குறிப்பிட்டதுபோல் எதிர் கிறிஸ்தவர்கள் மக்களிடையே வெளிப்பட்டு வருகிறார்கள். நாங்கள் உங்களுக்கு சமாதானம் கொண்டு வருவோம் என்று பறைசாற்றுவதுடன் சாத்தான் இவர்களுடன் பயனிப்பான். இவர்கள் மற்றவர்களின் உணர்வுகள் குறித்து கவலைப்பட மாட்டார்கள். உலக வரலாற்றில் கிட்லர், முசோலினி, ஸ்டாலின் போன்றவர்களெல்லாம் அதிகார அடக்குமுறைகளை பயன்படுத்தி மக்களை தங்களுக்கு அடிமையாக்க முயற்சித்து தோல்வியை தழுவிக் கொண்டதை நாம் வரலாற்றினூடாக கண்டுள்ளோம். இன்றைய நற்செய்தி வாசகத்தல் குறிப்பிட்டபடி ஆதியிலே வார்த்தை கடவுளோடு இருந்தது அந்த வார்த்தை மனுவுருவெடுத்து எமக்காக இரத்தம் சிந்தி எம்மை சுத்திகரித்தது. இவ்வார்த்தை, காற்றையும், கடலையும் இரையாதே என்று அதட்டியது. பாதை தெரியாது தடுமாறும் வேளைகளிலெல்லாம் எமக்கு ஒளியாக வழிநடத்துவதையும், எம்மால் பல சந்தர்ப்பங்களில் உணரக்கூடியதாக உள்ளது. இன்று நம்மில் அநேகர் கொடிய நோய்களால் பீடிக்கப்பட்டவர்களாகவும், மதுவுக்கும், போதைக்கும் அடிமைபட்டவர்களாகவும் பணம், பொருள் வசதியிருந்தும் நிம்மதியிழந்தவர்களாகவும் காணப்படுவதை எம் அன்றாட வழ்வில் நாம் காண்கின்றோம். இவற்றிற்கெல்லாம் விடுதலை கொடுக்க இயேசு ஒருவரால்தான் முடியும். “சமாதானத்தை உங்களுக்கு விட்டு போகிறேன் என்னுடைய சமாதானத்தை உங்களுக்கு அளிக்கிறேன்” என்ற வார்த்தையை எமக்கு அளித்தவிட்டு சென்றுள்ளாா் இறைமகன் இயேசு. எனவே கறிஸ்தவப் பெயரோடு மட்டும் வாழாது கிறிஸ்துவோடு ஒன்றித்து வாழ பிறக்கப் போகும் புதுவருடத்தில் இறைவனிடம் வரம் வேண்டுவோம்.